# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,**
**அவர்கள் முன்பாக**

************

முறையீட்டு மனு எண். 090 /2016

ஆணை எண். 72 /2016

நாள்: 15 / 04 /2016

ஓமலூர் ஊர் பொது மக்கள்,
ஓமலூர் பேரூராட்சி,
ஓமலூர் தாலுகா,
சேலம் மாவட்டம். மனுதாரர்

செயல் அலுவலர்,
ஓமலூர் பேரூராட்சி,
சேலம் மாவட்டம். எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சியைச் சேர்ந்த ஊர் பொது மக்கள் என அனுப்புநர் முகவரியிட்டு பெறப்பட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் 12.02.2016 அன்று பெறப்பட்டு 090/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆணை**

சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சி பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் என அனுப்புநர் முகவரியிட்டு முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டது. மேற்படி முறையீட்டு மனு மீது , ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து விளக்க அறிக்கையினை இம்முறை மன்ற நடுவத்திற்கு அனுப்புமாறு கோரப்பட்டது. அவ்வாறு ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலர் 28.03.2016 நாளிட்ட அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

*"2. சேலம் மாவட்டம் ஓமலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட 15 வார்டுகளிலும் வீடு மற்றும் வணிகக் கட்டிடம் கட்டுவதற்கு விண்ணப்பிக்கும் நபர்களின்*

*விண்ணப்பம், கட்டிட வரைபடம் மற்றும் இணைக்கப்படும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, செயல் அலுவலரால் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள அளவீடுகள் சரியானவையாக இருப்பின் விதிமுறைகளுக்குட்பட்டு கட்டிட வரைபட அனுமதி வழங்கப்படுகிறது. வரைபடத்தில் உள்ள அளவீடுகள் , நேரடி ஆய்வின் போது தவறாக உள்ளது என கண்டறியப்பட்டால் கட்டிட வரைபட அனுமதி பேரூராட்சி மூலம் வழங்கப்படுவதில்லை என்ற விபரத்தை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*3. மேலும், தலைவர், துணைத்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்படும் கட்டிட வரைபட விண்ணப்பங்களும் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, விதிகளின்படியே கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டு வரப்படுகிறது. விதிமுறைகளை மீறிய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகிறது என்ற விபரத்தினை பணிவுடன் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.''*

4, இந்நிலையில் மனுதாரர் முகவரி ஊர் பொது மக்கள் என்பதால் விசாரணைக்காக அழைப்பாணை அனுப்பிட இயலாது. மேலும் செயல் அலுவலர், மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிட வரைபட விண்ணப்பங்கள் தலைவர், துணைத்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்பட்டு தள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு விதிகளின் படியே கட்டிட வரைபட அனுமதி வழங்கப்படுகிறது எனவும் விதிமுறைகளை மீறிய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளதால் மனுதாரரின் புகார் மனுவின் மீது மேல் நடவடிக்கை எழும் வாய்ப்பு இல்லை என கருதி இம்முறை மன்ற நடுவம் புகார் மனுவினை முடிவுற்றதாக முடித்து ஆணையிடுகிறது.

2016ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13 ஆம் நாளன்று கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலருக்காக

பெறுநர்:

செயல் அலுவலர்,
ஓமலூர் பேரூராட்சி,
ஓமலூர்– 636 455. சேலம் மாவட்டம்.